
# போர்வாள்

...திராவிடர் வார வெளியீடு...


| வாள் | திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆனி 27 | வீச்சு |
| --- | --- | --- |
| 1 | 10-7-48 சனிக்கிழமை | 46 |


ஆசிரியர்கள்:



[9-ம் பக்கத் தொடர்ச்சி]

டத்திற்குத் தலைமைதாங்கி நடத்தவும், தம்கெழுதகை நண்பர் **பெரியார்** அவர்களின் பக்கம் நின்று தமிழகத்தின் விடுதலைப் போருக்குப் பணிபுரியவும் ஆயத்தமாக இருப்பதாகவும், தமிழுக்கு வரும் ஆபத்தை முறித்துத் தள்ளுவது அல்லது இந்த முயற்சியிலேயே செத்து மடிவது என்ற முறையில், இரண்டிலொன்று பார்க்கத் துணிந்துவிட்டார் என்பதாகவும் தெரிகிறது. நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே என்று அஞ்சாது கூறிய நக்கீரனார்போல நாவலர் பாரதியாரும், இருபதாம் நூற்றாண்டின் தொல்காப்பியர் போல மறைமலை அடிகளாரும், எல்லார்க்கும் இனிய-யாவர்க்கும் உரிய திருவள்ளுவர் போல அறிஞர் திரு. வி. க வும் இணைந்து நின்றால் இந்த மூவர்தம் அருகே, வட ஆரிய மன்னர்தம் செருக்கடக்கிய பின்னர் இமயத்தில் தன் புலிக்கொடி நாட்டிய சேரன் செங்குட்டுவன் போல அந்த மறவிப் போர்வீரர் **பெரியார்** நின்று, தமிழகத்திற்கு போர்ப்பாதையை அமைத்துக் கொடுப்பார், அமைப்பதோடின்றி, தமிழகம் செல்லவேண்டிய திக்கை, போகவேண்டிய முறையை, அணி வகுப்புகள் நிரல் நிரலே அமைய வேண்டிய வகையை, படைவரிசைகள் இருக்கவேண்டிய ஒழுங்கு வரிசையை வகுத்துத் தருவார் என்பதில் யாருக்குத்தான், எத்தகைய ஐயப்பாடுதான், எப்படித்தான் இருக்க முடியும்? மொழிப் போர் என்று சொன்னால் **அறிஞர் அண்ணாவும்** "ஒதுங்கி" இருக்க முடியாது, நிச்சயம் வந்துதான் ஆகவேண்டும், பெரியாரின் பக்கம் அவருடைய அன்புக்குரிய தளபதி என நின்றுதான் ஆகவேண்டும். **திருச்சி விசுவநாதம், சௌந்தரபாண்டியனார்**, போன்ற அன்றைய இந்திப் போர்த் தலைவர்களும் இம்முறை எட்ட நிற்க முடியாது வேறு "காரணங்கள்" ஆயிரம் இருந்தாலும்! அன்றைய போராட்டத்தின்போது **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்** தன்னந்தனியே வந்தார், இந்திக்குத்தமிழ் நாட்டில் ஆதிக்கமாம் நீங்கள் எல்லோரும் வாருங்கள் நாட்டினரே என்ற பண் பாடிக்கொண்டு! இன்றோ, அவர், 'சீறும் பகைவர்க்குச் செந்தமிழர் கைத்திறத்தைக் கூறும்' தமது **குயில்** தனையும் கூட்டிக்கொண்டல்லவா வருவார்? **டாக்டர் தருமாம்பாள்** அவர்களைப் பொறுத்தவரை, விடுதலை ஜாமீனுக்கு அவர்கள் நன்கொடை திரட்டித் தந்ததே போதுமே இந்திப் போராட்டத்திற்கு தமிழ் மங்கையார் சார்பில் அவர் அச்சாரம் அளித்துவிட்டார் என்பதைக் காட்ட. மூவலூர் இராமாமிர்தத் தம்மையார், மலர்முகத்தம்மையார், ஆர் நாராயணியார், வ. பா. தாமரைக் கண்ணியார், புவனேசுவரியார் (தோழர் N. V. நடராசனின் துணைவியார்,) சிவசங்கரியார் (தோழர் டி. வி. முருகேசம் துணைவியார்), வ. ச. சரோசனியார் (தோழர் தேவ சுந்தரம் துணைவியார்), ஞானம் அம்மையார் (மறைமலை அடிகளாரின் இளைய மருமகள்), மறை. மா. சரோசனியார் (மறைமலை அடிகளாரின் மூத்த மருமகள்), பட்டம்மாள் (பாவலர் பாலசுந்தரம் துணைவியார்) போன்ற படைத் தலைவியரை உடன் அழைத்துக் கொண்டு, டாக்டர் தருமாம்பாள், மங்கையர் அணிவகுப்புக்குத் தலைமை தாங்கி நடத்திச் செல்லப் போகிறார் என்பதும் இயற்கையில் எதிர் பார்க்கக் கூடியதுதானே! இளந்தமிழ்ப் புலவர்களோ, சென்னையில் ஓயாது சுழன்று சுழன்று தமிழ்ப் பணி ஆற்றிவரும் அவர்களுடைய வாத்தியார்—தமிழர் தம் பெரு நண்பர்—**மயிலை சிவ. முத்து** அவர்கள் தலைமையில் திரள்திரளாகத் திரண்டு வருவதென்று முடிவு கட்டி விட்டார்கள் என்று கடைசியாக வந்திருக்கும் சேதியையும் முற்றிலும் எதிர்பாராதது என்று யார் சொல்லிவிட முடியும்? தோழர்கள் ம. பொ. சிவஞானம், நாரண துரைக் கண்ணன் போன்ற தேசிய வட்டாரத்திலுள்ள நம் நண்பர்களும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்டாலும் கொள்ளலாம் அல்லவா? சற்றும் நாம் எதிர்பாராத வேறுபலர், பலப் பலர், பல முக்கியமான தலைவர்கள், இம்முறை, மொழிப் போராட்டத்தில் ஈடுபடப்போகிறார்கள் என்பதையும் நாம் இப்போதே நிச்சயமாகக் கூற முடியும்.

உண்மையிலேயே, இதுபோது, அவினாசியாரின் கட்டாய இந்தித் திட்டம், அன்றைய ஆச்சாரியாரின் திட்டத்தைப்போல, பிரிந்து பற்பல முகாம்களில் தனித் தனியே நிற்கும் தமிழர்களை ஒரே பாசறையில் கொண்டு வந்து நிறுத்தும் ஆற்றல் படைத்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆச்சாரியாரின் கட்டாய இந்தி "டோஸ்" ஒரு விதத்தில் தமிழகத்தைத் தட்டி எழுப்பிற்று, தமிழர்க்குப் புத்துணர்ச்சி ஊட்டிற்று, தமிழ் வாழ்வு எனில் புதுவாழ்வு எனும் நிலைதனை உண்டு பண்ணிற்று என்றால், அவினாசியாரின் கட்டாய இந்தி கட்டாய சமஸ்கிருதம் எனும் இரண்டு மூலப்பொருள்களிலிருந்தும் தயாரிக்கப்பட்ட கல்வித் திட்ட இஞ்சக்ஷன், தமிழகத்தை, திராவிடத்தை, நம்மை என்று புறந்தந்த இன்பத் தென்னாட்டை, சுதந்தர சோஷலிச சுயமரியாதைக் குடியரசு எனும் நம் இலட்சிய பூமிக்கே அழைத்துச் சென்று விடக் கூடும். ஆச்சாரியாரின் பணி தமிழ் தமிழ் என்ற விழிப்புணர்ச்சியை மட்டும் தமிழர்க்குத் தந்து, தமிழ் நாடு தமிழருக்கே என்று இலட்சியச் சொல்லை மட்டும் தமிழ் நாட்டில் உண்டு பண்ணிற்று. அவினாசியாரின் பணி அந்த இலட்சியச் சொல்லை நடைமுறைக் கீதமாக, வரலாற்று உண்மையாக, முடிந்துபோன சம்பவமாக மாற்றிவிடப் போகிறது. ஆச்சாரியார்—முதல் அத்தியாயம்! அவினாசியார்—இரண்டாம் அத்தியாயம்! இரண்டு அத்தியாயங்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையுமல்ல, வேறுபட்டவையுமல்ல. மேலோட்டமாகப் பார்க்கும்போது, இரண்டிற்குமிடையே சிறிதளவு வேற்றுமை இருப்பதுபோல் தோன்றலாம் ஆனால் அடிப்படையில் இரண்டும் ஒன்றேதான். முதல் அத்தியாயத்தின் தொடர்ச்சியும் வளர்ச்சியும்தான் இரண்டாவது அத்தியாயம். இரண்டாவது அத்தியாயத்தின் தொடக்கமும் தோற்றமும்தான் முதல் அத்தியாயம். ஆச்சாரியார், அவினாசியார் இரண்டும் ஒன்றுதானே! எண்ணிப் பாருங்கள், இரண்டும் ஒன்றாகத்தான் இருக்கும்! அளந்து பாருங்கள், இரண்டும் ஒன்றாகவே இருக்கும்! நிறுத்துப் பாருங்கள், இரண்டும் ஒன்றுதான்! ஆமாம், நாம் முதலிலேயே சொல்லவில்லையா இரண்டும் ஒன்றுதான் என்று!!

---

# இந்திப் போர்—நாம் பெற்ற பேறு!

[முன்பு, இந்திப் போர் மூண்டு எழுந்த வேளை, பெரியார் அவர்கள், 'நெருக்கடி—என்றுமில்லா நெருக்கடி' 'போர் மூண்டுவிட்டது—தமிழர் ஒன்று சேர்க' என்பன போன்ற தலைப்புகளில் நான்கு அரியதலையங்கங்கள் தீட்டினர், அவை இக்காலப் போராட்டத்திற்கும் பொருந்துவனவே ஆதலின் அவற்றிலிருந்து சில பகுதிகளை மட்டும் எடுத்துத் தொகுத்துக் கீழே தந்திருக்கிறோம், தமிழரின் சிந்தனைக்கு விருந்தாக! ஆட்சியாளருக்கு எச்சரிக்கை மொழியாக!

"தமிழ் நாட்டில் தமிழ் மக்களுக்கு இந்தி மொழியைக் கட்டாய பாடமாகக் கற்பிக்க வேண்டுமென்று தற்போதைய சென்னை சர்க்கார் பிடிவாதமாக முடிவு செய்துவிட்டது.

"சூழ்ச்சி, சுயநலம், விஷமம், வர்ணாச்சிரமம் ஆகிய விஷங் கலந்த இத் திட்டத்தைத் தமிழர் உண்டு மாள்வரோ என நாம் பயந்தோம். அக்கிரகார மந்திரி சபையின் அக்கிரமப் போக்கால், தமிழர் சமூகம் நசிக்காதிருக்க வேண்டுமே என கவலை கொண்டோம். இத்திட்டம் அர்த்தமற்ற அவசியமற்ற மோசமான மனுஆட்சித் திட்டமென்றோம். நம்மைப் போன்றே தமிழ் உலகும் கருதிற்று. தமிழர்கள் சீறி எழுந்தனர் எங்கும் ஒரு கொதிப்பு ஏற்பட்டது. தமிழ்நாடு கொந்தளித்தது. பலமான கிளர்ச்சி ஆரம்பித்தது. ஆயிரக் கணக்கான மக்கள் அடங்கிய கூட்டங்கள் கூட்டப்பட்டு பிரதி தினமும் இந்திக் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப் பெற்றன. "தமிழ் மொழி அழிக்கப் படுவதைக் கண்டும் கேட்டும் நாங்கள் உயிரோடு இரோம்." என்ற முழக்கம் மூலை முடுக்குகளிலும் எழும்பிற்று. தமிழர் கழகங்களென்ன, பாதுகாப்புச் சங்கங்களென்ன, இந்தி எதிர்ப்புச் சபைகள் எத்தனை, இவ்வளவும் தமிழ்நாட்டில் தோன்றின, பண்டிதர்கள் பதறினர்கள். மாஜி கவர்னர்களும், மாஜி மந்திரிகளும், காங்கிரஸ்மீது காதல் கொண்டோரும், பிரபலஸ்தாகளும், வாலிபர்களும், பொதுமக்களிடை நிரந்தரமான தொடர்பைக் கொண்டுள்ள சுயமரியாதை இயக்கத் தலைவர்களும் தோழர்களும் இத்திட்டத்தைக் கண்டித்து பலத்த பிரசாரத்தைத் தென்னாடு பூராவும் நடத்தினர்கள். இக் கிளர்ச்சியின் பயனாகவே பல பிரத்யேகமான மாநாடுகள் நடைபெற்றன.

"இப்படியெல்லாம் தமிழ் மக்கள் எவ்வளவோ தூரம் முயன்றும், எத்தனையோ கூட்டங்கள் மூலம் தங்களுடைய அதிருப்தியையும் ஆத்திரத்தையும் காட்டியும் சர்க்கார் சிறிதும் லட்சியம் செய்யவில்லை. உண்மையில் தமிழ்மக்களுக்கு இந்தி நஞ்சு என்பதை எடுத்துக்காட்ட தமிழ் மக்கள் எடுத்துக் கொண்ட முயற்சி கொஞ்ச நஞ்சமல்ல. இன்று முதலமைச்சர் கனம் ஆச்சாரியார் மாத்திரமல்லாமல், மற்ற அமைச்சர்களும் அவர்களது காரியதரிசிகளும் தமிழ் நாட்டில் பொதுக் கூட்டங்களில் தலைகாட்ட முடியாத நிலை ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் இந்த இந்தியைக் கட்டாயமாக நுழைக்க முயற்சித்ததுதான் என்பதை மனப்பூர்த்தியாக ஆச்சாரியார் உணர்ந்தும், அறைக்குள்ளாகவே இருந்து கொண்டாவது இந்தியைப புகுத்திவிட்டுத்தான் மறு காரியம் பார்ப்பது என்கின்ற விரதம் பூண்டுவிட்டார். எனவே இனி கெஞ்சிக் கொள்ளுவதாலோ, சமாதானமான முறையில் வேறு ஏதாவது முயற்சி செய்வதாலோ எவ்வித பயனும் ஏற்படப் போவதில்லை என்கின்ற நிலைமை காணப்படுகிறது.

"இனி தமிழ் மக்கள் செய்ய வேண்டியது என்ன என்பது தான் இப்போது முக்கிய பிரச்சினையாய் இருக்கிறது........

"தமிழ் மக்களின் பழம் பெருமைகளும் பாட்டிக் கதைகளும் எவ்வளவு மேன்மையாக இருந்த போதிலும், தமிழ் மக்களின் இன்றைய நிலைமை பூர்வ பெருமைக் கேற்றதாக இல்லை என்பதோடு தமிழ் மக்கள் ஆரியக் கொடுமையிலிருந்து அதி இலேசாகத் தப்புவதற்குத் தகுதியான நிலையிலும் இல்லை.

"இதனால் எந்தத் தமிழ் மகனும் பயந்துவிட வேண்டியதில்லை; அவநம்பிக்கை கொண்டுவிட வேண்டியதில்லை. அதற்குப் பதிலாக இந்தியைத் தடுப்பதற்கு ஆக நாம் செய்யப்போகும் காரியங்களைத் திட்டப்படுத்துவதற்கு முன் நம் நிலைமை நன்றாக உணர்ந்து, நம் வலிமையும் மாற்றான் வலிமையும் அளவுகண்டு மேலால் சிந்திக்க வேண்டும் என்பதை வலியுறுத்தவே இவற்றைக் குறிப்பிட்டோம்........

"உண்மைத் தமிழ் ரத்தம் அதாவது சிறிதும் கலப்பற்ற

(10-ம் பக்கம் பார்க்க)

# கல்லறை பேசினால்..........!

அடடே! நீங்கள்தானா! வாருங்கள்! வாருங்கள்! உங்களைத்தான் பார்க்கவேண்டும் என்றிருந்தேன், நீங்களே வந்துவிட்டீர்கள்! மிக மிக நல்லதாயிற்று.

ஏன் சார் நீங்கள் நலம்தானா? ஏராளமாக வேலை இருக்குமே உங்களுக்கு? இரவும் பகலும் 'பைல்' களைப் புரட்டவேண்டும், எதெதுகளுக்கோ பேட்டி கொடுக்கவேண்டும், அந்தத் திட்டம் இந்தத் திட்டம் என்று முறைகள் பல வகுக்க வேண்டும், ஓ. பி. ஆர் ஐ அடிக்கடி பார்த்து ஆணை ஏதேனும் உண்டா என்று கேட்கவேண்டும். டின்னர் பார்ட்டிக்கும் தேநீர் விருந்துக்கும் கான சங்கீத மண்டலிகளுக்கும் திருவள்ளுவர் திருநெறிக் கழகங்களுக்கும் ஓயாமல் போய்ப் போய் வரவேண்டும், அப்பப்பா, எவ்வளவு வேலை உங்கட்கு?......மற்ற மந்திரிகளுக்காவது, 'ஓய்வு ஒழிச்சல்' இன்றி வேலை செய்த பிறகு வீட்டிற்குப் போனால் இல்லக்கிழத்தியர் உண்டு அமைச்சர்களின் வேலைத் தொல்லையால் விளைந்த சிரமமும் கஷ்டமும் அவர்களின் அன்பு எனும் அபிஷேகத்தால் கதிரவனைக் கண்ட பனியெனக் கரைந்துபோகும். ஆனால் உங்களுக்குத்தான் திருமணமே இல்லையாமே, ஒண்டிக் கட்டை, என்ன செய்வீர்கள், பாவம்!

ஆமாம்,நீங்கள், ஏதோ, கட்டாய இந்தி எனும் திட்டத்தை தமிழ்நாட்டில் நுழைப்பதென்று இருக்கிறீர்களாமே மெய்தானா அது? வேண்டாம் சார் வேண்டாம். வெடிமருந்துக் கிடங்கில் சென்று தீப் பந்தத்தைச் சுழற்றுவதுபோன்ற இந்த ஆபத்தான விளையாட்டு வேண்டாம். தமிழர்களைப் பார்த்தால் சாதுக்களாகத்தான் இருப்பார்கள். சாதுக்கள் தானே என்றெண்ணிக் கொண்டு அவர்களுடைய கட்டைவிரலை மிதித்தால் மிதிப்பவர் தலை மீது அவர்களுடைய கால் செல்லும், இது அவர்களுடைய வாடிக்கை மட்டுமல்ல, வரலாறுகூட. சாதுமிரண்டால் காடு கொள்ளாது என்று பழமொழியே இருக்கிறதே, உங்களுக்கு என்ன தெரியாதா? தமிழர் உள்ளம் பார்ப்பதற்கு நீலகிரி மலைபோல அமைதியின் சின்னமாகத்தான் இருக்கும். ஆனால் அது நீலகிரி மலை அல்ல, விந்திய மலையுமல்ல, ஓர் குமுறும் எரிமலை. உள்ளே பிரம்மாண்டமான தீச்சுழல் சுழன்று சுழன்று வீசிக் கொண்டிருக்கிறது. எரிமலை எந்த நேரத்திலும் வீறி வெடிக்கக்கூடும். வெடித்தால், உள்ளிருக்கும் அக்கினிக் குழம்பு சில சமயம் காட்டாற்று வெள்ளம்போல் வெளியே ஓடும். சில சமயம் சுழன்றடிக்கும் சூருவளியெனப் பாய்ந்து பாய்ந்து பரவும். சில சமயம் பசிகொண்ட வேங்கையென சுற்றுப் புறத்தில் உள்ள எண்ணற்ற கிராமங்களை ஒரே விழுங்கில் விழுங்கிவிடும். பல சமயங்களில் எரிமலை வெடித்தால் அந்த ஜில்லா முழுவதுமே அணுக்குண்டு பாய்ச்சலை ஏற்ற ஓர் ஹிரோஷிமாவாக மாறிவிடும். அவ்வளவு ஆபத்தான, பயங்கரமான, நினைத்தாலே நெஞ்சம் நடுங்கத்தக்க காட்சிகளைத் தரவல்லது எரிமலை. நீங்கள் நிலவிளக்கச் சுவடிகளில் இதுபற்றிய தகவல்களைப் படித்திருப்பீர்களே, வெடிக்கும் எரிமலையின் பயங்கர விளைவுகளை உணர்ந்திருப்பீர்களே, படித்துணர்ந்துமா தமிழர் உள்ளம் என்ற எரிமலையின் உச்சியிலே இந்தி என்ற 'டைனமிட்' வெடி வைக்கிறீர்கள்! செ! என்ன விபரீதமான செயல்!

அமைச்சர் சார், உங்களிடம் எனக்கிருக்கும் ஆசையால் கூறுகிறேன், தயவு செய்து இந்த விபரீத காரியத்தை மட்டும் நிறுத்தி விடுங்கள். வேறு எதை வேண்டுமானாலும் செய்யுங்கள், இதை மட்டும் செய்யாதீர்கள். குமுறிக் கொந்தளித்துக் கொண்டிருக்கும் எரிமலையின் உச்சியிலே சென்று நிற்பதே ஆபத்து, திடீரென்று எரிமலை வெடித்தால், உச்சியில் நிற்பவர் சுக்கு நூறாக்கப்பட்டு வீசி எறியப்படுவர், ஆனால் நீங்களோ நிற்பதோடில்லை டைனமிட் பற்ற வைக்கிறீர்கள்! வேண்டாம், வேண்டாம்! விளைவு மிக மிக பயங்கரமானது!

அமைச்சர் சார், என்னைப் பாருங்கள், நான் யார் தெரிகிறதா? ......ஏன், தெரியவில்லையா.........என்னைத் தெரியவில்லையா சார் உங்களுக்கு.........ஆமாம், உங்களுக்கு எப்படித் தெரியும்......அந்தக் காலத்தில் நீங்கள் எங்கே இருந்தீர்களோ, என்ன செய்து கொண்டிருந்தீர்களோ.........ஆச்சாரியார் வந்தால் அவர் நன்றாகத் தெரிந்து கொள்வார் நான் யாரென்று...... நான் ஓர் கல்லறை. ஆயிரமாயிரம் வாலிபர்களின் கண்ணீர்த் துளிகள் எழுப்பிய கட்டிடம். தமிழ்ப் பெருங்குடி மக்களின் இருதய பீடம். ஆச்சாரியார் ஆட்சியின் "மாட்சி"க்கோர் அழியாத சின்னம். இங்கே எண்ணற்ற இளந்தமிழர்கள் வருகிறார்கள், துறவிகள் வருகிறார்கள், புலவர்கள் வருகிறார்கள், தன்மான இயக்கத் தோழர்கள் வருகிறார்கள், போர் எனில் புன்னகை பூத்த முகத்துடனே 'புறப்பட்டோம் களத்திற்கு' என்று கூறும் நெஞ்சுறுதியும் வீரத்தமிழ் உணர்வும் படைத்த மங்கைமார் வருகிறார்கள், அணி அணியாக மாணவ மணிகள் வருகிறார்கள், படைத் தளபதிகள் வருகிறார்கள், போர்வீரர்கள் வருகிறார்கள், அனைவரும் என்னைக் காண்கிறார்கள், கண்ணீர் சிந்துகிறார்கள். நான் பார்க்கிறேன், அந்தக் கண்ணீரிலே கூர்வாள் நிழலாடுவதைப் பார்க்கிறேன். தாரை தாரையாக நீர் பொழியும் கண்கள் இரண்டொரு விநாடிகளில் ஆவேச அனல் கக்கும் தீப்பந்தங்களாக மாறிவிடுவதைப் பார்க்கிறேன், அமைதியையும் அன்பையும் உருக்கத்தையும் சாந்தமான எண்ணங்களையும் தவழவிட்ட முகங்கள் வெகு விரைவில் கோபத்தையும் கொதிப் புணர்ச்சியையும் ஆத்திரத்தின் வெளியீடான ஆவேச அலைகளையும் தவழவிடுவதைப் பார்க்கிறேன்; தமிழ் எங்கள் இளமைக்குப் பால்—நல்ல தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு வேல் என்று இன்னிசை முழக்கம் செய்து கொண்டே வந்தவர்கள், பங்கம் விளைத்திடில் தாய் மொழிக்கே உடல் பச்சை ரத்தம் பரிமாறிடுவோம் என்று ஆக்ரோஷத்துடன் கூறிக்கொண்டே செல்கின்ற காட்சிகளைப் பார்த்திருக்கிறேன். நான் பார்த்திருக்கிறேன் எண்ணற்ற இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக வந்து என் முன் நின் ஆன என் தமிழர் ஆட்சி நிறுவ அல்லல்கள் வரின் ஏற்போ

ஊன் உடல் கேட்பினும் செந்தமிழ் நாட்டுக்கு உவப்புடன் நான் சேர்ப்பேன் என்று சூள் உரைத்துச் செல்லும் நிகழ்ச்சிகளை நான் பார்த்திருக்கிறேன் — பார்த்திருக்கிறேன் என்பது மட்டுமல்ல; "தாயின் மேல் ஆணை, தந்தைமேல் ஆணை, தமிழகத்தின்மேல் ஆணை, தூய என் தமிழ் மேல் ஆணையிட்டே நான் தோழரே உரைக்கின்றேன்" என்று தொடங்கி, "தமிழரின் மேன்மையை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன், எமை நத்துவாய் என எதிரிகள் கோடி இட்டழைத்தாலும் தொடேன்" என்று முடிக்கிறபோது அந்த சூள் உரைக்கும் தீரர்கள் ஒவ்வொருவரும் எதற்கும் தயாராய் இருக்கக்கூடிய துள்ளு காளைகள் என விளங்குவதைக் கண்டு 'அக்கிரகாரம்' அஞ்சி நடுங்கியதைக் கண்டு நான் நடுங்கி யிருக்கிறேன்.

ஆமாம் அமைச்சரே, நான் இருக்கிறேனே இந்த இடம் ஒரு 'மெக்கா', ஒரு 'ஜெருசலேம்', ஒரு ஸ்டாலின் கிராட், தமிழர்களுக்கு! இங்கே தான் அவர்களுடைய இரண்டு மாவீரர்கள் புதைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆச்சாரியார் காலத்தில் இந்தி எதிர்ப்புப் போர் நடந்ததே, தமிழன் தொடுத்து நடத்தினானே வரலாறு கண்டறியா மொழிப் போராட்டம், அந்தப் போராட்டத்தின்போது பார்ப்பனீய பலி பீடம், இரண்டு தமிழ்க் காளைகளின் உயிரைத் தனக்கு இரையாக்கிக் கொண்டது, அந்தக் காளைகளின் உடல்மட்டும் இங்கே இந்த மண்ணுக்கடியிலே இருக்கிறது. ஆனால் உயிர் தமிழர் சமுதாயத்தினிடையே உலாவிக்கொண்டிருக்கிறது, தமிழர் வாழ்க்கையில் வீர உணர்ச்சியைப் பாய்ச்சிக் கொண்டிருக்கிறது, இனிய தமிழுக்கு இலக்கியம் சேர்த்துக் கொண்டிருக்கிறது. அந்த உயிர் அடிக்கடி தன் உடலைக் காண வருகிறது, அந்தக் காட்சிதான் எண்ணற்ற தமிழர்கள் இங்கு ஓடோடி வந்து சூளுரை புகன்றுவிட்டுச் செல்லும் காட்சி.

சோவியத் ரஷ்யாவிலே, மக்கள், க்ரெம்ளின் மாளிகைக்குச் சென்று சிகப்புச் சதுக்கத்திலே உள்ள லெனின் உருவத்தைக் காணாத நேரமில்லை அதுபோலத் தான் இங்கேயும் மக்கள் தங்கள் தாய்மொழிக்கு உற்ற ஆபத்தைக் களைந்தெறிய தம் உயிரை அர்ப்பணித்த, இந்திப் போரில் சிறை சென்று அந்தச் சிறைக் கம்பிகளுக்குப் பின்னாலேயே மயான புரியின் இருப்பைக் கண்டுவிட்ட **தாளமுத்து, நடராசன்** என்னும் இரு வாலிபர்களையும் தேடிக்கொண்டு இங்கே வராத நேரமில்லை. வந்து, இருவரும் இருக்கவேண்டிய இடத்திலே, நான், வெறும் கல்லறை, இருக்கக் கண்டு, தங்கள் கண்ணீரால் இந்தக் கல்லறையை [என்னை] கழுவாத நேரமில்லை. இதோ பார்க்கிறீர்களே என்மீது ஏராளமான நீர்த் துளிகள், இவை அத்தனையும், அமைச்சர் அவர்களே, மக்கள் உருகி அழுது சிந்திய கண்ணீரிலிருந்து சிதறிய சிறு பொறிகள்தானே தவிர வேறில்லை. இந்தக் கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்றும் செந்தமிழை வீழ்த்துவாரை வீழ்த்தவல்ல ஒவ்வொரு போர்வாள், அது எனக்குத் தெரியும்—உங்களுக்கும் தெரிந்திருக்க வேண்டும் — ஆனால் தெரியக்காணோம்-தெரிவிக்கவேண்டியது என் கடமை—நான் உங்கள் நண்பனல்லவா—உங்கள் நல்வாழ்வில் அக்கறை உடையவனல்லவா—நீங்கள் சிறந்து பொலியக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் நீந்தித் திளைக்க வேண்டியவன் அல்லவா—ஆகவே தெரிவிப்பது என் கடமை மட்டுமல்ல உரிமைகூட—ஆகவே தெரிவித்துவிட்டேன்.

அமைச்சர்சார், சென்ற இரண்டு வாரங்களாக இங்குவந்து தாளமுத்து நடராசன் பெயர்களை ஆணையிட்டு கட்டாய இந்தியை ஒழித்தே தீருவோம் என்று உறுதிச் சொல் உரைப்பவர் தொகை ஆயிரம் பல்லாயிரம் எனப் பெருகிக் கொண்டிருக்கிறது. ஒழிந்தால் இந்தி ஒழியட்டும் இல்லையேல் எங்கள் திராவிட இனம் அடியோடு ஒழிந்து மறையட்டும் என்று அவர்கள் இடும் முழக்கத்தைக் கேட்டுக் கேட்டு இந்த இடுகாட்டிலே உள்ள மண்ணுக்கும் மரத்துக்கும் செடி கொடி புல் பூண்டுகளுக்கும் கூட தமிழ் உணர்ச்சி வந்ததுபோல அவைகளும் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கின்றன, வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர் என தமிழ் முழக்கம் செய்கின்றன. ஏன் இவ்வளவு ஆர்ப்பாட்டம், ஆரவாரம்; சூளுரை, மறுபடியும் ஆச்சாரியார் வந்துவிட்டாரே இந்தியை நுழைத்து விட்டாரே என்று முதலில் ஐயப்பட்டேன். ஆனால், ஓர் நாள், வந்த தமிழர்களின் வீர உரையாடலிலிருந்து தெறித்தது ஓர் வாசகம். "ஆச்சாரியார் மீண்டும் வரமுடியாது—திருப்பரங்குன்றம் வழி மறிக்குது—மலை போல் படுத்திருக்குது அந்த மாடு—ஆனால் திருப்பரங்குன்றத்துக் கணவாய் வழியாக வந்த அவினாசியார் ஆச்சாரியாரையும் மிஞ்சி விட்டார்—அவராவது இந்தியோடு நின்றார், இவர், இந்தியை மட்டுமல்ல, செத்த வடமொழியையும் கூட கட்டாய பாடமாக்கி இருக்கின்றார், இந்தத் திட்டத்தை வெட்டி எறிவதே நம் முதற் பெருங் கடமை என்று அவர்கள் பேசிடக் கேட்டேன், அடடா நம்ம அவினாசியார் அவர்களா இப்படிச் செய்கிறார் என்று வருந்தினேன், உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதுதானே நட்பு, ஆகவே, வர இருக்கும் ஆபத்தை உங்கட்கு உடனே சொல்லிவிட வேண்டும் என்று துடித்தது என் உள்ளம், ஆனால் தங்களிடம் வரமுடியவில்லை நான், எப்படி வர முடியும், நான்தான் கல்லறை ஆயிற்றே, எனக்குக் கால்களேது நடக்க, ஆனால் நல்ல வேளையாக நீங்களே வந்துவிட்டீர்கள்! சொல்லிவிட்டேன்! என் கடமையை நான் நிறைவேற்றிவிட்டேன். நீங்கள் போகிற பாதை தவறானது; தமிழருக்கும் தமிழுக்கும் கேடுதரக் கூடியது, ஆபத்தானது, ஆபத்தான நிலைமைக்குத் தமிழ்மொழியைத் துரத்தக் கூடியது, ஆகவே நீங்கள் அந்தப் பாதையிற் செல்ல தமிழர்கள் அனுமதிக்கமாட்டார்கள், செந்தமிழின் உரிமை ஓர் செத்த வடமொழியாலும் ஓர் குருட்டு இந்தி மொழியாலும் பறிக்கப் படுவதைக் கண்டும் சும்மா இருக்கமாட்டார்கள், போர் தொடர்வது உறுதி என்பதை எடுத்துக் காட்டிவிட்டேன். இனி, உங்கள் விருப்பம். உங்களிடம் சட்டம் இருக்கிறது, சிறை இருக்கிறது, போலீஸ் இருக்கிறது, மெய்தான், ஆனால் இவ்வளவுதான் உங்களிடம் இருக்கின்றன, மக்கள் உள்ளம்—அது உங்கள் பக்கம் இல்லை, இந்தி எதிர்ப்பாளர் பக்கம்தான் இருக்கிறது. இரண்டிலே எது வெல்லும் என்பது எனக்குத் திட்டவட்டமா

[11-ம் பக்கம் பார்க்க]

போர்வாள்

10—7—48 சனிக்கிழமை

## ஆச்சாரியார்! அவினாசியார்!

**ஆச்சாரியார்! அவினாசியார்! இரண்டு சொற்கள்! இரண்டு அருமையான சொற்கள்! என்றென்றைக்கும் தமிழர் உள்ளத்தைவிட்டு அகல முடியாத சொற்கள்! தமிழ்நாடு உள்ள வரையில், தமிழ்மொழி உலவும் வரையில், கடைசித் தமிழன் ஒருவனின் கடைசி மூச்சு இருக்கும் வரையில் மறையமுடியாத இரு சொற்கள்! எந்தக் காரணத்தை முன்னிட்டும் தமிழர் மறந்துவிட முடியாத அவ்வளவு தனிச் சிறப்பு வாய்ந்த சொற்கள்!**

**ஆச்சாரியார்! அவினாசியார்!** ஒன்றை எண்ணினால் மற்றொன்று நினைவிற்கு வந்தே தீர்கிறது. ஒன்றைப் பற்றி எழுதினால் மற்றொன்று நெஞ்சத் திரையிலே தோன்றி, என்னைப் பற்றி ஏன் எழுதவில்லை என்று கேட்கிறது! ஒன்று, மற்றொன்றை, தப்பாமல், தவறாமல், இழுத்துக் கொண்டுதான் வருகிறது!

**ஆச்சாரியார்! அவினாசியார்!** இரண்டு சொற்களையும் ஒலித்துப் பாருங்கள்—ஒரே வகையான ஒலிதான் பிறக்கும். இரண்டு சொற்களையும் எண்ணிப்பாருங்கள்—ஒரே எண்ணிக்கையுள்ள கூட்டுத்தொகைதான் கிடைக்கும். இரண்டையும் துலாக்கோலில் வைத்து எடைபோட்டுப் பாருங்கள்—நிச்சயம் ஒரே எடைதான் இருக்கும். இரண்டு வார்த்தைகளையும் அளந்து வேண்டுமானாலும் பாருங்கள், ஒரே அளவுதான் இருக்கும். எத்தகைய உரைகல் கொண்டு வேண்டுமானாலும் உரைத்துப் பாருங்கள், இரண்டின் தரமும் ஒன்றாகத்தான் இருக்கும்.

ஆச்சாரியார்—இதிலே இருப்பதும் ஆறு எழுத்துக்கள்! அவினாசியார்—இதிலே இருப்பதும் ஆறு எழுத்துக்கள்! ஆச்சாரியார்—இதனைக் கூறினாலும் தமிழர் உள்ளம் குமுறிக் கொந்தளிக்கிறது. அவினாசியார்—இதனைக் கூறினாலும் தமிழர் சுழன்றடிக்கும் சூறாவளியென உருமாறுகின்றனர். ஆச்சாரியார்—இதனைக் கூறியதும் நினைவில் உறுவது இந்தி எனும் நச்சுக் கோப்பையை தமிழ்க் கிள்ளையின் கரத்திலே தந்து கட்டாயம் குடித்துத்தான் ஆகவேண்டும் என்று வற்புறுத்தும் விபரீதக் காட்சி! அவினாசியார்—சொல்லி முடித்ததும் நினைவில் எழுவது அணுவளவும் தவறாமல் அதே காட்சி தான்!

ஆச்சாரியார்—இதற்குப் பொருள், இனி, தமிழர் அகராதியில், அவினாசியார் என்று இருக்கும். அவினாசியார்—இதற்குப் பொருள், இனி, ஆச்சாரியார் என்று இருக்கும்.

அவினாசியார் என்று சொல்கிற இடத்திலே அந்தச் சொல்லைக் கல்லெறிந்துவிட்டு, ஆச்சாரியார் என்ற சொல்லை வைத்துப் பாருங்கள். பொருத்தமாக இருக்கும். அதுவேபோல, ஆச்சாரியார் என்ற சொல் நிமிர்ந்து நிற்கும் இடத்திலே அதனை எடுத்துவிட்டு அவினாசியார் என்ற சொல்லை நிறுத்திப் பாருங்கள். கொஞ்சமும் சங்கடமின்றி நிற்கும்.

ஆச்சாரியார்—இந்த எழுத்துகளைப் பாருங்கள்! இவை ஒன்றன்பின் ஒன்றாக அமைந்துள்ள அழகு வரிசையைப் பாருங்கள். அவினாசியார்—இந்த எழுத்துகளையும் பாருங்கள். இவற்றின் அமைப்பு முறையையும் பாருங்கள். ஏதேனும் வேறுபாடு தோன்றுகிறதா உங்களுக்கு?

தோன்றாது. தோன்றமுடியாது.

உங்களுக்குத் தோன்றாது என்பதுமட்டுமல்ல, உண்மைத் தமிழர் எவருக்குமே தோன்றாது.

எப்படித் தோன்றும்?

ஆச்சாரியார் தமிழகத்தின் ஆட்சிப் பீடத்திலே அமர்ந்திருந்த வேளையிலே எந்த சத் காரியத்தில் ஈடுபட்டிருந்தாரோ அதிலேதான் அவினாசியாரும் ஈடுபட்டிருக்கிறார். ஆச்சாரியாருக்கு, எது, மிக மிக அவசியமும் அவசரமுமானசொல் என்று அன்று தோன்றிற்றோ அதுதான், இன்று, அவினாசியாருக்கும் தோன்றுகிறது. அவருக்குப் பிடித்தமான பொருள், கட்டாய இந்தி. இவருக்கு மகிழ்ச்சியூட்டும் மஹோஹரியும் அதுவாகத்தான் இருக்கிறது. அவர் தமிழர்களின் உள்ளக் கொதிப்பை பொருட்படுத்தினாரில்லை, இவரும் பொருட்படுத்துவதாகத் தோன்றவில்லை. அவருக்கு இயற்கையிலேயே ஓர் காது கேளாது, அந்தக் காதைத் திருப்பினார் இந்தி எதிர்ப்பாளர் பக்கம். இவருக்கு இரு காதுகளும் கேட்கும் ஆற்றல் படைத்தனவே எனினும் அவற்றைக் கேளாக் காதுகளென ஆக்கிக்கொண்டுவிட்டார். அவர் அடானாவில் துவக்கி முகாரியில் முடித்தார் தன் கட்டாய இந்தி சங்கீதத்தை. இவரும் அதையேதான் செய்வது என்ற முடிவுக்கு வந்துவிட்டதாகத் தெரிகிறது. ஆச்சாரியார், கையில் கிடைத்ததைக் கொண்டு அடிப்பேன் என்றார், கிரிமினல் திருத்தச் சட்டத்தை வீசுவேன் என்றார், செக்கிழுக்கச் செய்யும் சிறையும் கல் உடைக்கச் செய்யும் கடுங்காவலும் என்னிடம் உண்டு கண்டீர் என்றார், போலீஸ் உண்டு, அவர்களிடம் சுழல் துப்பாக்கி உண்டு, பட்டாளம் உண்டு அவர்களிடம் குண்டு பீரங்கிகள் உண்டு, பத்திரிகைகள் உண்டு அவற்றிடம் பிரசார அதிர்வேட்டுகள் உண்டு, இவ்வளவும் என்னிடம் உண்டு, உங்களிடம் என்ன உண்டு என்று கேட்டார், சட்டம் எனும் வாளை நான் வீசினால் அதைத் தடுக்கும் கேடயம் உங்களிடம் ஏது என்று கேலி பேசினார், ஆனால் மூவாறு நாட்களுக்குள்ளாகவே, போலீஸ் பாதுகாவலின்றி வெளிவர முடியாத நிலை பெற்றார், பார்க்கும் இடமெங்கும் புற்றீசல் என இந்தி எதிர்ப்புப் பட்டாளங்கள் உலவக் கண்டார், பட்டி தொட்டியெங்கும் சேரன் செங்குட்டுவனின் பரம்பரை இக் காலக் கனகவிசயர்களைச் சும்மா விடோம் என்று போர் முரசு கொட்டிடும் காட்சிகளைக் கண்டார், தமிழர்தம் தோள்வலியையும் அதனினும் வலிய அவர்தம் மனவலியையும் கண்டார், காளைகளை அடக்கினால் தோகையர்கள் வருவதையும், தோகையரை அடக்கினால் முதியவர்கள் முந்திடுவதையும், அவர்களை அடக்கினால் சின்னஞ்

று குழந்தைகளும் சீறிடும் சிங்க ஏறுகளெனப் போர் புரிந்திடும் அற்புதத்தையும் கண்டார், கடைசில் தோல்வியைக் கண்டார், வந்த இந்தி வெட்கத்துடன் வெளியேறுவதைக் கண்டார். நம் நண்பர் ஆசிரியாரும், ஆச்சாரியார், அன்று கையாண்டு பார்த்துப் பலனில்லை என்று கைவிட்டுவிட்ட அதே அகராதியைத்தான் அவசர அவசரமாக எடுத்து அதிவேகமாகப் புரட்டிப் பார்க்கிறார், இறுதியில் இவரும் தோல்விப் பள்ளத்தில் ‘ திடும் ’ எனக் கவிழ்ந்து விழத்தான் போகிறார்.

ஆச்சாரியார் கட்டாய இந்தியை நுழைத்தபோது அதை எதிர்த்தெழுந்து போராடிய தமிழர் பட்டாளம் இன்று மறைந்து விடவில்லை—வளர்ந்திருக்கிறது; கண்டோர் கேட்டோர் திகைக்கும் விதத்தில் வளர்ந்திருக்கிறது; ஒன்று பத்து நூறாக வளர்ந்திருக்கிறது; ஆயிரம் பதினாயிரம் நூறாயிரம் என வளர்ந்திருக்கிறது; பரம்பரை பரம்பரையாகப் ‘புல்’ ஏந்தும் தொழிலன்றி வேறு அறியாத “அந்தச் சிறு கூட்டம்” வாள’ ஏந்துவோம் என்று கூறிடவேண்டிய அளவுக்கு வளர்ந்திருக்கிறது. அன்று இருந்த பட்டாளம் வளர்ந்திருக்கிறது என்பது மட்டுமேயல்ல, அன்று இல்லாத பலப்பல புதிய படை வரிசைகள் இன்று நம் பாசறை நோக்கி வரத் தொடங்கி விட்டன. அந்தக் காலம் அல்லும் பகலும் “ தமிழ் மணி ” கள் நம்மை அலர் தூற்றிய காலம்; “ பிரசண்ட விகடன்கள் ” இந்தியை எதிர்ப்போம் என்று போர் முரசு கொட்டத் துணியாத காலம்; தேசிய வட்டாரத்தில் தமிழின உணர்ச்சி அரும்பி மலர்ந்து காய்த்துக் கனியாத காலம்; தமிழ் நாடு தமிழருக்கே என்ற நம் இலட்சிய முழக்கம் கேலிக்குரிய காட்டுக் கூச்சலாக தேசியத் தமிழர்களால் கருதப்பட்ட காலம், முறுக்கு மீசை சிவஞானங்கள் தமிழ் முரசு என்பதாக ஒன்று உள்ளது என்பதையே ஒப்புக்கொள்ள மறுத்த காலம்; பண்டிதர் உலகிலிருந்த இரண்டொருவரைத் தவிர மற்றவர்கள் தமிழ் மொழிப் போர் என்றாலும் கூட இலட்சியப் பார்வையையே தமக்குரிய “ அலங்கார பூஷண ” மாகக் கொண்டிருந்த காலம்; கல்லூரிகள் பெரிதும் நமக்கு எதிர்ப் புறத்துப் பாசறைகளாக இருந்த காலம். அந்தக் காலத்திலேயே சரிந்துபோன கட்டாய இந்தி, **இன்று** இருக்க முடியுமா? இன்று என்றால் எப்படிப்பட்ட **இன்று**? கல்லூரிகள் நமக்குப் படை வீடுகளாகவும் புலவர் கூட்டம் நமது முன்னணி வீரர்களாகவும் தேசியத் தமிழர்கள் நம்மிலும் உணர்ச்சி வாய்ந்த இந்தி எதிர்ப்பாளர்களாகவும் உள்ள **இன்று**! காங்கிரஸ் ஏடுகளிலே தமிழ்நாடு தமிழருக்கே என்ற இலட்சியச் சொல் நித்த நித்தம் ஓடி விளையாடுகிற **இன்று**! நாம் எதிர்க்கா விட்டாலும் தேசிய வட்டாரம் இந்தியை ஒழித்தன்றி ஓயாது என்னும் அரிய நிலை ஏற்பட்டுவிட்ட **இன்று**! அன்று மீது கல்வீசிய கரங்கள் எலாம் பூ மாலையையும் பாமாலையையும் நமக்கு மாறி மாறிச் சூட்டிட முனைந்தோடிவரும் **இன்று**! தமிழ் வாழ்க—இந்தி ஒழிக என்று தமிழர் இதயத்திலிருந்து வீறிட்டுக் கொண்டெழுந்த அந்த வீர ஒலியை தமிள் வாள்க—இந்தி ஒளிக என்று கேலிக் குரல் எழுப்பி கிண்டல் பாணம் தொடுத்தவர்கள், இனிய தமிழ் இருக்க. இந்திச் சனி ஏதுக்கு என்று எக்காளமிடத் தொடங்கிவிட்ட


தமிழர் இல்லந்தோறும் இருக்கவேண்டிய புத்தகம்! ★ இந்தி எதிர்ப்பாளர் கரத்திலெல்லாம் தவழவேண்டிய நூல்!

# தமிழன் தொடுத்த போர்!

அல்லது

## இந்தி எதிர்ப்பு இயக்க வரலாறு

மா. இளஞ்செழியன் B. A. (HONS)
தீட்டியது!

கட்டாய இந்தி வருவது கேட்டு தமிழகம் போர்க்கோலம் பூண்டுவிட்டது இந்நாள்! இதே போல் அன்றோர் நாள் தமிழ்நாடு கொந்தளித்தது. அந்தக் கொந்தளிப்பின் முழு வரலாறு இது!

## பெரியாரின் கருத்து:

“இந்தப் புத்தகம், இதைப் படித்துப் பார்க்கிறவர்களுக்கு, இந்தி எதிர்ப்புப் போரைப் போல உடனே ஒரு போராட்டம் ஏற்படாதா, நமக்கும் அதில் ஒரு பங்கு கிடைக்காதா என்கின்ற ஒரு ஆத்திரத்தையும் ஆவேசத்தையும் உண்டுபண்ணத் தக்கதாக இருக்கிறது.

உண்மையைச் சொல்ல வேண்டுமானால், இப் புத்தகத்தைக் கொஞ்சம் பார்த்த அளவிற்கே, எனக்கே, இந்தி எதிர்ப்புப் போன்றதான—ஏன்—அதைவிட முக்கியமான காரியங்களுக்கும் போராட வேண்டியது இன்றியமையாததாகக் காணப்படும் இக் காலத்தில் நாம் ஏன் சும்மா இருக்கிறோம் என்ற உணர்ச்சி ஏற்படுகிறது.

இப் புத்தகம், நடந்தவைகளைத் தொகுத்திருக்கிறது என்பது மட்டுமல்லாமல், இனி யாராவது ஏதுபற்றியேனும் ஒரு போராட்டம் துவக்க வேண்டுமென்று கருதுபவர்களுக்கு ஒரு வழி காட்டியாகவும் இருக்கிறது. மற்றும் இப்புத்தகத்திலிருந்து இப் போரின் தலைவர்களையும் தளபதிகளையும் வீரர்களையும் வீராங்கனைகளையும் தெரிந்துகொள்ளவும், அவர்களைப் பாராட்டவும், அவர்களுக்கு ஏற்பட்டது போன்ற வாய்ப்பை எதிர்பார்க்கவும் திராவிட இளைஞர்களுக்கு ஒரு துடிதுடிப்பு ஏற்படும்.

இப் புத்தகம் ஒவ்வொரு தமிழ் இளைஞர் கையிலும் இருக்க வேண்டுமென்பது என் ஆசை”

240 பக்கங்கள்! குறைந்த விலை!

விலை ரூ. 1 12 0 தபாலில் ரூ. 2 0 0

### பகுத்தறிவுப் பாசறை

147, பவழக்காரத் தெரு :: சென்னை 1.

இன்று! அன்று ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காரணத்தால் இந்தியை எதிர்க்க முடியாது போயிற்றே தவிர நாங்களென்ன தமிழ்ப் பற்றில் குறைந்தவர்களா, எங்கட்கென்ன தமிழ் உணர்ச்சி இல்லையா, எங்கள் உள்ளத்தில் ஊறுவது தமிழ் ஊற்று அல்லவோ, வெள்ளையன் போயொழிந்த இந்நாள் வடநாட்டு வம்பர் மொழிக்கு இங்கு அரியாசனம் தர நாங்கள் இசைவமோ, அமைச்சர் குழு பங்கம் விளைத்திடில் தாய் மொழிக்கே, உடல் பச்சை ரத்தம் பரிமாறுவோம் அல்லமோ என்று கருஞ்சட்டைகளைப் பார்த்து கதர் சட்டைகள் கம்பீரக் குரலில் கூறிடும் இன்று! திராவிடர் இயக்கம் என்று கேட்டாலே மாற்றுக் கட்சிகளிலே உள்ள தமிழர் உள்ளத்திலும் தேன் ஆறு பாய்ந்திடும் இன்று! இன்று இந்தி நிலைக்கும்? அன்பர் அவினாசியாருக்குத் தெரியுமோ தெரியாதோ, கட்டாய இந்தித் திட்டம் தவிடுபொடியாகி மண்ணோடு மண்ணாக மாண்டொழிந்துபோகும் வரையில் இந்தி ஒழிப்புத் தொண்டு தவிர வேறு தொண்டிலோ தொழிலிலோ நுழைவதில்லை என்று ஆயிரமாயிரம் தமிழர்கள் சூளுரைத்துக்கொண்டிருக்கிறார்கள். தந்தைமார் நாங்கள் போகிறோம் போர்க்களத்திற்கு என்றுகூற உங்கட்கோ வயதாயிற்று, வேண்டாம், ஆல் விழுதுவிட்டதுபோல உங்கள்பால் பிறந்த வீரக் கொழுந்துகள் நாங்கள் இருக்கிறோம், செல்கிறோம் களத்திற்கு, சாய்க்கிறோம் பகைவர்களை, ஓய்ந்திருப்பீர் நீர் என்று தனயன்மார் தந்தைமார்க்குச் சமாதானம் கூறிக்கொண்டிருக்கிறார்கள் ஓர் பால். காதலர்கள் தத்தம் காதலியரைப் பார்த்து, போகிறேன் சிறைக் கோட்டம் செந்தமிழைக் காப்பாற்ற என்று கூற, "**போகிறேன்** என்றல்ல, **போகிறோம்** என்று கூறும், இருவரும் போவோம், அதுதானே நியாயம், அன்றோர் நாள் புன்னை மர நிழலிலே என்னைச் சந்தித்தஞான்று எஞ்ஞான்றும் உனைவிட்டுப் பிரிந்திட மாட்டேன் என்று உரைத்த சூள் மறந்தீரோ, எனைவிட்டுச் செல்வீரோ—கூடாது, முடியாது" என்று அவர்தம் காதலியர் தமிழ் இல்லந்தோறும் பாட்டு மொழியால் பதில் கூறிக்கொண்டிருக்கிறார்கள் மற்றோர்பால். அப்பாவும் அம்மாவும் செந்தமிழின் நலத்திற்காக 'களம் புகு காதை' தொடங்கிடப் போட்டியிடும் அரிய காட்சி கண்ட அவர்தம் குழந்தைகள் நாங்கள் மட்டுமென்ன தமிழ்க் கிள்ளைகள் அல்லவா, எங்களை விட்டுவிட்டு நீங்கள் மட்டும் செல்வதா, வேண்டுமானால் நீங்கள் இருங்கள், நாங்கள் போகிறோம் என்று மழலை மொழியிலே முத்தமிழைக் கலந்து வீசிக்கொண்டிருக்கிறார்கள் இன்னோர் பால். இந்தக் "குடும்ப விவகாரத்"தைக் கண்டு கொண்டிருக்கும் தண்டூன்றிய முதுகிழவர்கள், தம்பிமார்களே—பேரன்மார்களே—சும்மா இருங்கள் சந்தடி செய்யாமல்—எங்கட்குத்தான் முதற் பரிசு,—போராட்டத் தலைவர் பெரியாரும் எங்களவர் தெரியுமோ என்று முடுக்கான வார்த்தைகளை மிடுக்காக அள்ளிப் பொழிகிறார்கள் வேறோர் பால். முன்னே போவது யார், களத்திலே முதலில் நிற்பது யார், என்பதிலே தமிழ்ப்புலவர்கட்கும் அவர்தம் மாணவர்கட்கும் போட்டா போட்டி ஒரு புறத்தில்! எங்கள் சர்க்காரின் தவறுகளைத் திருத்தும் உரிமை எங்களுக்குத் தானே முதலில் உண்டு—ஆகவே

# இந்தியினைத் தொலைத்தன்றி ஓய்வுகொள்ளோம்!

★

[புலவர் அழகுவேலன்]

★

[கல்வி அமைச்சர் தமிழ்த்தாய்மீது விசியுள்ள இந்திக் கத்தி வீச்சு தமிழ்ப் புலவர் உலகில் எத்தகைய பெருங் கொந்தளிப்பை உண்டு பண்ணி இருக்கிறது என்பதற்கு ஓர் அரிய எடுத்துக் காட்டு இந்த இனிய தமிழ்ப் பாட்டு. புலவர் குழுவின் சார்பில் நண்பர் அழகுவேலன் எடுத்துக் கொண்டுள்ள இச் சூளுரையைக் கேட்டேனும் அமைச்சர் தம் தவறான திட்டத்தை விட்டொழிக்க வேண்டும்—அதுவும் விரைவாக! புரட்சிப் புயல் சுழன்றடிக்கத் தொடங்கும் முன்பாக!]

★

பண்பட்ட திராவிடரே! பழந்தமிழின்
சுவைகண்ட பான்மையோரே!
விண்பட்ட நும்புகழை வீழ்ச்சியுறும்
வழியிலினி விடுதல் நன்றோ?
புண்பட்ட நெஞ்சினிலே புதியதொரு
வேல்விட்ட புன்மை போல
மண்பட்ட ஆரியத்தால், மதிப்புற்ற
செந்தமிழை மறைக்கின்றாரே! (1)

மக்கட்கே யாகாத மாதேவர்க்
கேற்றமொழி மண்ணில் வேண்டாம்
வெக்கக்கே டேயதனை வேண்டிநாம்
தமிழோடு சேர்த்து வைத்தல்
எக்காலும் நம்முடனே உறவாடிக்
கெடுப்பதுபோல் ஊர்ப்பார்ப்பார்கள்
தக்கபொழு திதுவென்றே தயங்காமல்
இந்தியினை நுழைக்கின்றாரே! (2)

ஆரியத்தை இவ்வடிவில் அமைக்கின்றார்
நம்நாட்டில்; அறிவோ? அன்றி
வீரியமோ? தமிழ்ச்சோற்றின் விளைவோ?
பின் ஆட்சிக்கோர் மாற்றந்தானோ?
நேரியநன் முறையினிலே நிச்சயமாய்
உரைக்கின்றோம் தமிழ்மேலாணை
கூரியசெந் தமிழ்வாளால் இந்தியினைத்
தொலைத்தன்றி ஓய்வு கொள்ளோம். (3)

மொழிப் போரில் வெற்றிப் பாதை அமைக்கும் உரிமையும் எங்கட்கே உண்டு என்று சர்க்கார் அலுவலகங்களில் உள்ள காளைகள் கூற, கொந்தளிக்கும் தோழர்களே, கொஞ்சம் துடுக்கடங்கிக் கிடவுங்கள், நாங்கள்தானே சர்க்காரை அமைத்தோம் ஆகவே சர்க்காரின் தவறுகளைக் களையவேண்டியதும் நாங்கள்தான் என்று வேறு அலுவல்களிலும் வாணிகத் துறை பலவற்றிலும் உள்ளவர்கள் மறுப்புரை வழங்கிடும் இனிய காட்சி ஒரு மருங்கு! மலை குலையினும் மனங் குலையாத மாவீரம் படைத்த சுயமரியாதை இளஞ் சிங்கங்களே, எத்தனை முறைதான் எது எதற்கு என்று தான் நீங்கள் போராடுவது, இம்முறை, நீங்கள் ஓய்வு கொள்ளுங்கள், நாங்கள் ஏற்கிறோம் தமிழ்ப் பாதுகாப்புப் பணியினை! கண்ணுதற் பெருங் கடவுளும் கழகமோடமர்ந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப் பசுந் தமிழைப் போற்றும் உரிமை சிவனாரையே மறுக்கும் உங்கட்கு ஏது எங்கட்குத்தான் என்று சைவ இளைஞர்கள் உரிமை பாராட்ட, "செச்சே! எங்கட்கு ஓய்வு எதற்கு? உழைத்து உழைத்து சமுதாயத்திற்குப் புது உருவம் உண்டாக்குவது தவிர வேறு வேலைதான் எங்கட்கு ஏது? உங்கட்கு ஏராளமாக வேலை இருக்குமே! திருவாசகத்திலே தொடங்கி திருப்போரூரார் சந்நிதி முறை வரையிலே ஏராளமான ஏடுகளைப் புரட்டவேண்டி இருக்குமே" என்று தன்மான இயக்கத் தோழர்கள் ஆசையோடும் உரிமையோடும் கூறும் "நையாண்டி" ஓர்பக்கம். ஆம்! தியாகத் தீயிலே குதிக்கவும், தளராது பணி பல புரியவும், அஞ்சாமல் அறப்போர் தொடுக்கவும், ஆற்றலுள்ள வீரர் கோட்டம் அமைக்கவும்; நாடெங்கும் மக்கள் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றனர். மங்கைமார் போர்முரசுக்கு ஒலி அதிகமா காளைகளின் துந்துபிக்கு வன்மை அதிகமா என்ற போட்டி எங்கும் நடந்துகொண்டிருக்கிறது. பொன்னும் பொருளும் மட்டுமா தருவோம், தமிழ் எனில், அதைக் காக்க எம் உடலையும் தருவோம். உயிரையும் தருவோம் என்று தமிழர்கள் ஊர்தோறும் கூட்டங் கூட்டமாகக் கூடிநின்று வீர உரை புகன்று கொண்டிருக்கிறார்கள். "1938, 39ம் ஆண்டுகளிலே தமிழ்நாட்டிலே ஒரு தாளமுத்தும் ஒரு நடராசனும் இருந்தார்கள். இந்நாள் நாங்கள் ஒவ்வொருவருமே ஒரு நடராசனாக ஒரு தாளமுத்தாக இருக்கிறோம்," என்று வட்டாரந்தோறும் உள்ள தமிழர் பட்டாளங்கள், வார்த்தைகளால் அல்ல, தத்தம் செய்கைகளால், உரைத்த வண்ணம் இருக்கிறார்கள். "தமிழ் நாட்டில் இந்தி இருந்துதான் தீரவேண்டும் என்றால் இருக்கட்டும், தடையில்லை, ஆனால் அந்த இந்தி அப்படியிருக்க வேண்டுமானால் தமிழ் இரத்தம் தம் உடலிற் பாய்ந்தோடும் பேறு படைத்த ஆண் பெண் குழந்தை குட்டிகள் இளைஞர் முதியர் அத்தனைபேரையும் பிணமாக்கிக் குவித்துவிட்டு அந்தப் பிணக் காடுகளின் மீது தன் பலிபீடத்தை அமைத்துக்கொண்டு, அவர்கள் சிந்திய இரத்தத்தை உறிஞ்சிக் குடித்துக்கொண்டு, அரசோச்சட்டும் என்று கண்களில் தீப்பொறி பறக்க, குருதி கொதிக்க, தோள்கள் துடிக்க, கைகளில் தினவெடுக்க, உள்ளம் குமுறக் குமுறக் கூவுகின்றார்கள் தமிழர்கள் நாட்டின் நானாபக்கங்களிலும்!

ஆச்சாரியார் காலத்திலும் இத்தகைய பெரு முழக்கம் எழுந்தது. அவினாசியார் ஆட்சிப்பீடம் ஏறி உள்ள இந்த நாளிலும் எழுகிறது. நாம் முதலிலேயே குறிப்பிட்டதுபோல ஆச்சாரியார்—அவினாசியார் இரண்டும் ஒரு பொருள் குறிக்கும் இருவேறு சொற்கள்தானே! தமிழ் மொழியின் நலத்திற்கு தெரிந்தோ தெரியாமலோ கேடு சூழ்பவர் என்பதுதானே அந்தப் பொருள்!

ஆச்சாரியார்! அவினாசியார்! அவருடைய கட்டாய இந்திப் படலம் 1938ல்! இவருடைய கட்டாய இந்திப் படலம் 1948ல்! சோர்வும் சோகமும் உற்று, சோம்பலையும் தூக்கத்தையும் துணைக் கழைத்துக் கொண்டு, அச்சம் எனும் நோயால் பிடிக்கப்பட்டு, அசைவற்று ஆற்றலற்று பணிபுரி நினைப்பற்றுக் கிடந்த தமிழகத்திற்கு ஆச்சாரியாரின் திட்டம் விறுவிறுப்பானதோர் "டானிக்" போல வந்தது. துள்ளி எழுந்தது தமிழகம், அதில் இரண்டொரு "டோஸ்" உள்ளே சென்றதும், விபீஷணன் போல் நைந்து கிடந்த தமிழகம் ஆச்சாரியாரின் கட்டாய இந்தி இஞ்செக்ஷனுக்குப் பிறகு இரணியன் போல், இராவணன் போல் வீறு பெற்றெழுந்து வீர உலா புரியலாயிற்று. தமிழகத்திலே ஓர் மறுமலர்ச்சி. தமிழர் உள்ளத்திலே ஓர் புத்தெழுச்சி, மங்கைமார் கூட்டத்திலே ஒரு பெருங் கிளர்ச்சி. தமிழர் வாழும் இடமெங்கும் புதுவகையானதோர் ஆர்வத்தின் கொந்தளிப்பு. திடீரென்று தமிழகம் தன்னையே தான் உணரத் தொடங்கிற்று. நமதென்று காட்டுவோம் நந்தமிழ்ப் பொன்னாடு—நரிகளுக்கிங்கில்லை வேலை என்ற முழக்கம் காற்றிலே கலந்துவரும் கீதமாயிற்று. அந்தக் கீதத்திலே எம் தலைவர் பெரியார் வாழ்க எனும் நாதம் நின்று நடனமாடிற்று. ஆச்சாரியார் நாட்டிலே மூட்டிவிட்ட இந்தித் தீ தமிழரிடையே இருந்த சோகத்தையும் சோம்பலுணர்ச்சியையும் சுட்டுப் பொசுக்கிற்று; பிளவுகளையும் பிரிவுகளையும் அழித்தொழித்தது; எட்ட எட்ட இருந்தவர்களை கிட்டத்தட்ட ஒன்று சேர்த்தது. தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவனுக்கொரு குணமுண்டு என்ற சொல் பிறந்திடச் செய்தது. அன்று ஆச்சாரியார் தமிழர்களை ஒன்றுசேர்த்தார் அவருடைய இந்தித் திட்டத்தின் மூலம். இன்று அவினாசியாரும் அதைத்தான் செய்கிறார். இவருடைய கல்வித் திட்டம் எனும் கூர்வாள் தமிழ் மாணவன் ஒவ்வொருவனுடைய உள்ளத்திலேயும் பாய்ச்சப்பட இருக்கிறது என்பதைக் கேட்ட பிறகும்கூட எப்படித்தான் தமிழகம் தன் உட்பிரிவுகளையும் கருத்து வேற்றுமைகளையும் மறந்து ஒன்றுபடாமல் இருக்க முடியும்? மொழிப் போராட்டத்தில் என் பங்கு அன்றுபோல் இன்றுமுண்டு என்று ஏற்கனவே போர் முரசு கொட்டி விட்டார் நாவலர் பாரதியார்! நடமாடும் சங்க இலக்கியம் எனத்தக்க அந்தப் பெரும் புலவர், தமிழ்க் கடல், மறைமலை அடிகளாரும் தன் தள்ளாத வயதிலும் தமிழ்ப் பணி ஆற்ற, தமிழுக்கு வந்துள்ள ஆபத்தைத் தடுக்க 'தயார்' கூறிவிட்டாராம். தமிழ்ப் பகைவராலும் தமிழ்த்தென்றல் என்றே அழைக்கப்படும் பெற்றி வாய்ந்த நம் முதுபெருந் தலைவர் திரு.வி.க. அவர்களோ, இம்முறை, மொழிப்போராட்

[2-ம் பக்கம் பார்க்க]

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

சுத்த தமிழ்ரத்தம் ஓடும் வீர வாலிபர்களே இந்தி எதிர்ப்பு இயக்கத்துக்கு வேண்டும்.

"எப்படிப்பட்ட ஆரிய சூழ்ச்சிக்கும் தந்திரத்திற்கும் இணங்க முடியாத பெரியவர்களே நமக்கு வேண்டும்.

"பார்ப்பன தயவு இல்லாது வாழமுடியாது என்கின்ற தமிழ்மகன், முடிபுனைந்த மன்னனாய் இருந்தாலும் அவனுடைய நிழலும் இம் முயற்சியில் பட நாம் இடம் கொடுக்கக் கூடாது.

"இரண்டிலொன்று அதாவது இந்தி பலாத்காரத்தை ஒழித்தாலொழிய தனது சொந்த வாழ்வைக் கவனிப்பதில்லை என்கின்ற முடிவுக்காரர்கள் மாத்திரமே எதிர்ப்பு முயற்சி நிர்வாகத்தில் அங்கத்தினராய் இருக்கவேண்டும்.

"பொருளாதார விஷயத்தில் போதுமான பொருள் உதவி கிடைக்கலாம் என்றாலும், ஒரு சமயம் கிடைக்காமல் போய் விட்டாலும், கிடைத்ததைக் கொண்டு, கிடைக்காவிட்டால் பிச்சை எடுத்தாவது பசியை ஆற்றிக்கொண்டு உழைப்பதற்கு உறுதி செய்துகொண்டவர்களே செயலில் கலந்துகொள்ள வேண்டும்.

"ஏற்படுத்திக்கொள்ளும் திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு ஒழுங்காகவும் ஒழுக்கமாகவும் நடந்து வருவதாக ஒவ்வொரு இளைஞனும் உறுதி செய்துகொள்ள வேண்டும்.

"கோடை விடுமுறை முடிந்த உடன் இந்திக் கட்டாய பாடமுறை அமுலுக்கு வரப்போகிறது. ஆகையால் அதிக சாவகாசம் இல்லை என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும், சகல பொறுப்புகளும் மானமுள்ள பரிசுத்த இளைஞர் கையில் இருக்கிறது என்பதை யாவரும் உணரவேண்டும், தலைவர்களாக இருப்பவர்கள் கீழிறங்கி வந்து வினைஞர்களாகி மற்ற வாலிபர்களுக்கு வழிகாட்டிகளாகச் செல்லவேண்டும்.

"தாங்கள் முடிக்க எண்ணும் கருமத்திற்குச் சிறை செல்வது என்பது மிக மிக சாதாரண காரியமாகும். அதுவே கடைசிக் காரியம் என்று யாரும் கருதிவிடக் கூடாது. சர்க்கார் அதைச் சுலபத்தில் கையாளச் சம்மதிக்க மாட்டார்கள். ஆதலால் சிறை செல்லத் தயாராய் இருந்தால் போதாதா என்று எண்ணிவிடக் கூடாது. சிறை செல்வது ஓர் அற்பக் காரியமே ஆகும். அதை மூன்றுந்தர ஆட்களுக்கு விட்டுவிட வேண்டும். பிரமுகர்களும் பொறுப்பாளர்களும் அடிபடவும் உயிர்விடவும் தயாராய் இருக்கவேண்டும்.

"ஏனெனில் நாம் போராடக் கருதுவது எவ்வித நெஞ்சிரக்கமுமற்ற மறத்தன்மை கொண்ட மக்களோடு என்பதை ஒவ்வொரு வினைஞரும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். அதிலும் நாம் போராடக் கருதுவது எவ்வித இழிவான காரியத்தையும் செய்யத் துணிபவர்களுடன் என்பதையும் ஒவ்வொரு எதிர்ப்பாளனும் மனதில் இருத்த வேண்டும்.

"**தமிழ் இளைஞர்களே,** இதுவரை உங்களில் பலர் இந்தி எதிர்ப்புப் போருக்கு நான் தயார், நான் தயார், நானும் என் மனைவியும் தயார், உண்ணாவிரதத்திற்குத் தயார் என்பதாகத் தெரிவித்துக் கொண்டிருக்கிறீர்கள். அவரவர்கள் கஷ்ட ஜீவனம் நடத்தவும், அடிபடவும், இராப்பட்டினி பகல் பட்டினி கிடக்கவும், தொலைவழி நடக்கவும் தயார் செய்து கொள்ளுங்கள். **போர்முனை** சிப்பாய்போல் ஆக்கினைக்கு அடிபணியவும் தயார் செய்து கொள்ளுங்கள்.

"**பெரியோர்களே,** முன்மாதிரி காட்ட வாருங்கள் உங்களுடைய உள்ளங்களுக்குப் புதிய அங்கியை மாட்டிக் கொள்ளுங்கள். தனியுரிமைவாழ்க்கைக்குக் கருதப்படும் மானம் அபிமானம் வேறு, பொதுவுரிமைவாழ்க்கைக்குக் கருதப்படும் மானம் அபிமானம் வேறு என்பதை மனதிலிருத்தி அதற்குத் தகுந்தபடி, உங்களுடையமானம்அபிமானம் ஆகியவற்றை மாற்றி அமைத்து, அவைகளை உயிராகக் கருதுங்கள். உங்கள் மார்பைப் பார்க்காதீர்கள், அடிச்சுவட்டைப் பாருங்கள். வீர இளைஞருக்கு நீங்கள் வழிகாட்டுகிறவர்கள் என்பதை ஒவ்வொரு அடி வைக்கும் போதும்ஞாபகத்தில்வையுங்கள்.

"**தமிழ்ச் செல்வர்களே,** உங்களுக்கு ஒரு விண்ணப்பம், உங்கள் பழைய நடத்தைகளை மறந்துவிடுகிறோம். இப்போது தமிழர் இருப்பதா இறப்பதா என்கின்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்நிலைக்கு நீங்களும் பங்காளிகள் என்று நாம் சொல்லுவதால் நீங்கள் முனிவுகொள்ள தீர்கள். நடந்தது நடந்து விட்டது. அதைப் பரிகசிக்க நீங்கள் மானத்திலும் உயிரிலும் பெரிதாய் மதிக்கும் உங்கள் செல்வத்தைத் தாராளமாக இக்கருமத்திற்கு உதவி, பெரிய வீராகுங்கள்.

"**தமிழ்ப் பொதுமக்களுக்கு** ஒரு மாபெரும் விண்ணப்பம். தமிழ்த் தோழர்களே, இந்த 50 வருட காலத்தில் தமிழ்மக்களுக்கு இப்படிப்பட்ட ஒரு நெருக்கடி ஏற்பட்டதில்லை. இன்று நடப்பது பிரிட்டிஷ் ஆட்சி அல்ல; வருணாச்சிரம புரோகித ஆட்சியாகும். அதனால் ஒவ்வொரு மூச்சும் தமிழ்ம

(11-ம் பக்கம் பார்க்க)

(10-ம் பக்கத் தொடர்ச்சி)
ளை விலங்குகள் ஆக்குவதற்
ாக விடப்படும் மூச்சாகும்.
விலங்குகளாக வாழ்வதைவிட
உயிர்விடுவது மேலான காரிய
மாகும்.

"ஏதோ விலக்கமுடியாத பல
காரணங்களால் தமிழ் மக்களில்
பலர் புரோகித ஆட்சிக்கு அடி
மைப்பட்டுக் கிடந்தாலும்
அதைப்பற்றிக் கவலைப்படாமல்
அவர்களும் நாமும் நம் பின்
சந்ததியும் மனிதர்களாக வாழ
முயற்சிக்க வேண்டியது நமது
கடமை என்பதை உணருங்கள்.

"உங்கள் சௌகர்யத்திற்கு
அடங்கின சகல பரிசுத்தமான
ஆதரவுகளையும் அளியுங்கள்.
உங்கள் வாலிப இளைஞர்களைப்
போருக்குக் கச்சைகட்டி விரட்டி
அடியுங்கள்.

"தமிழ் மடாதிபதிகள் என்பவர்
களே, நீங்கள் இதுவரை நடந்து
கொண்டதையும் மறந்துவிடுகி
றோம். இந்தச் சமயத்தில்
தைரியமாய் முன்வந்து உங்
களாலான காசு உதவுவதோடு
உங்களிடம் பக்தி விசுவாசம்
காட்டுபவர்களை எங்களிடம்
விரட்டி விடுங்கள்.

"தமிழ்மக்களுக்கு இந்திப்
போர் ஒரு கிடைத்தற்கரிய பாக்
கியம் என்றே ஒவ்வொரு தமிழ
னும் கருதவேண்டும் என்று
ஆசைப்படுகிறோம். இதுபோ
ற ஒரு பயன் அளிக்கத்தக்க
போராட்டம் இனி சுலபத்தில்
ஏற்படும் என்று எந்தத் தமிழ
னும் லேசில் கருதமுடியாது
என்பதோடு இது அவ்வளவு
சுலபமானதும் அவ்வளவு
பெரிய பயனை அளிக்கக் கூடி
யதுமான ஒரு அரும்பெரும்
போராட்டமாகும். அதிக
காலம் நீடிக்காது. அதிக தொல்
லையும் துன்பமும் இருக்காது.
அதிக பணநட்டமும்கூட இருக்
காது என்று சொல்லத்தகுந்த
ஒரு போர் என்றே சொல்லு
வோம்.

"தமிழ் நாட்டில் மானமுள்ள
சுத்தத் தமிழ்மக்கள் எத்தனை
பேர் இருக்கிறார்கள் என்பதை
உலகம் உணர இதைவிட வேறு
தக்க சமயம் இனி சுலபத்தில்
கிடைக்காது கிடைக்காது.

"ஆகவே பொதுமக்களே
இளைஞர்களே தயாராகுங்கள்,
முன் வாருங்கள், ஒரு கை
பாருங்கள்.

"ஆரிய சூழ்ச்சிக்கும் திரா
விட வீரத்துக்கும் போர் மூண்டு
விட்டது! போர் நெருங்கி விட்
டது! தயார்! தயார்!! வெற்றி
நிச்சயம்! !!"

---

[5-ம் பக்கத் தொடர்ச்சி]
கத் தெரியும், உங்களுக்குத்
தெரியா விட்டால், அமைச்சர்
அவர்களே, இந்திய விடுதலைப்
போராட்டத்தின் வரலாற்றைப்
புரட்டிப் பாருங்கள் போதும்,
பிரஞ்சுப் புரட்சி ரஷ்யப் புரட்சி
போன்றவற்றின் வரலாற்றைக்
கூடத் தேடிச் செல்ல வேண்டாம்
தக்க விடை கிடைத்துவிடும் !!

* * *

சென்னை மூலகொத்தளம் இடு
காட்டிலே, வீரர்கள் தாளமுத்து
நடராசன் இருவரும் புதையுண்ட
இடத்திலே, எழுப்பப்பட்டுள்ள
கல்லறை பேசினால், பேசமுடியுமா
னால், நம் மதிப்பிற்குரிய கல்வி
அமைச்சர் — உயர்திருவாளர் —
அவினாசிலிங்கம் அவர்களுக்கு
இதைத்தான் கூறும். ஆனால் அது
பேசவில்லை, எப்படிப் பேசும்,
அதுதான் கல்லறையாயிற்றே!

---

[12-ம் பக்கத் தொடர்ச்சி]
னுள்ளே சென்றனர். இவர்களைக்
கண்டதும் புலம்பிக் கொண்டிருந்த
பெண் திகைத்தாள். இவர்களெல்
லாம் யார்? இந்நேரத்தில் இங்
கேன் வந்தார்கள்? என்றெண்ணி
ஒன்றும் புரியாமல் விழித்தாள்!
அவள் கண்களில் ஆற்றின் ஊற்
றைப்போல் கண்ணீர் ஓடி வந்து
கொண்டே இருந்தது.

அப்பெண்ணின் அருகே, தரை
யில் ஒரு பிணம் இருந்தது! அந்தப்
பிணம் கருத்தும், வெள்ளைப் பற்
கள் வெளியில் தெரிந்த வண்ண
மும், வெள்ளைப் பற்களுக்கிடையே
கருத்த நாக்கு நீக்கிக் கொண்டும்
இருந்த காட்சி, பார்ப்பதற்கே,
அந்நேரத்தில் மிகுந்த பயங்கரமாய்
இருந்தது!

எல்லோருடைய கண்களும் அந்
தப் பிணத்தின் மேல் மொய்த்துக்
கொண்டன. "நீங்கோ யாரு?"
என்று பிணத்திற் கருகே இருந்த
பெண் திடீரென்று கேட்டதும்,
அனைவர் உள்ளமும் திடுக்கிட்டன.

"நாங்கள் வழிப்போக்கர்!"
என்று ஆண்டி, பதிலளித்துவிட்டு,
"இவர்யார் அம்மா" என்று கேட்
டான்.

தேம்பும் குரலில் "என் புரு
ஷன்!" என்று கூறினாள்!

ஐயோ பாபம்! எப்படி இறந்து
விட்டார்?" என்று வினவினாள்
வேணி.

"பாம்பு கடித்து......" என்று
கூறி, கதறிக் கதறி அழுதாள்,
பிணமானவனின் மனைவி.

"உனக்கு யாரம்மா ஆதரவு?";
என்று கோபால் கேட்டதும், "கட
வுள்தானுங்கோ!" என்று அழுது
கொண்டே பதிலளித்து விட்டு,
பழையபடி அவள் ஓயாது அழ
ஆரம்பித்தாள்!

"கடவுள் துணை! அவனொருவ
னிருக்கிறானா? அறிவில்லாப்பெண்!
அவனொருவன் இருப்பது உண்மை
யானால், இவளுக்கு இந்த இளம்
வயதில் இவ்வளவு பெரிய துன்ப
மும், துக்கமும் வந்திருக்குமா?
கடவுளாம் கடவுள், அவனே ஒரு
மடையனின் கற்பனையில் முளைத்த
காளான்!" என்று ஆவேசம் வந்த
வனைப்போல கூறினான் குமார்.

(தொடரும்)

---

## அட்டைப் பட விளக்கம்

"அட்லியே, பெவினே, சர்ச்சில்
பிற்போக்குத் தனமாகப் பேசு
கிறார். அவர் வாயை மூடுங்கள்"
என்று கொக்கரிக்கிறார் சர்தார்
படேல். இவர் மட்டுமென்ன முற்
போக்கு வாதியோ?




தொடர்கதை :

[முன்பு : குமார், கோபால், வேணி, ஆண்டி நால்வரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கையில் திடீரென்று அழுகுரல் ஒன்று கேட்டது. அந்த அழுகுரலைப்பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக எண்ணினர். கோபாலின் செவிகளுக்கு அந்த அழுகுரல்.........]

"என் தாய் மொழியை, இன்பத் தமிழ் மொழியை அழிக்க இந்தி மொழியா? ஒப்பேன்! ஒரு காலும் ஒப்பேன்! என் உடலில் கடைசி சொட்டு இரத்தமிருக்கும் வரைக்கும் ஒப்பேன்! அன்னிய மொழியின் படை எடுப்பை எதிர்ப்பேன்! போரிடுவேன்! என்னைப் பெற்று வளர்த்த என்னரும் தந்தையே, என் அன்பு மனைவியே, எனக்கு விடை கொடுத்து அனுப்புங்கள்! அதோ! நம்தமிழ்த் தாய், காப்பாற்றுவார் இல்லையா, நான் பெற்ற மக்களெல்லாம் நடமாடும் பிணங்கள் தானா என்று கண்களில் நீர் கொட்டிக் கதறி அழுகிறாளே, அது உங்களுக்குக் கேட்கவில்லையா? என்னால் இதனைச் சகிக்க முடியவில்லை! திக்கற்ற என் தாயைக் காப்பாற்ற அனுப்புங்கள்! இதோ, இதோ சொல்கிறேன்!" என்று கூறி, மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எமை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை என்றி துள்ளி நடந்து, சிறைப்பட்ட தன் உயிர்க் கணவன், பாழும் சிறையில் பிணமானான் என்ற செய்தியைக் கேட்ட, தாலமுத்துவின் மனைவி தமிழ் நாடு அதிர கதறி அழுதாளே, அந்தச் சோக ஒலியைப் போல் கேட்டது கோபாலுக்கு!

இப்படியாக, அறிவின் நிலைக்கும், உணர்ச்சியின் எல்லைக்கும் ஏற்றாற்போல அவர் அவர்கள் உள்ளத்தில் பற்பல எண்ணங்கள், அந்த அழுகுரலைக் கேட்டதும் எழுந்தன!

அவர்கள் இவ்விதம் சிந்தித்த வண்ணம் நடந்து கொண்டிருக்கையில், எதிரில் சிறிது தூரத்தில்
குடிசையும் குடிசையின் கூ
விருந்த சிறுசிறு சந்துகளின்
யாக வெளியே வந்த விளக்
ஒளியையும் கண்டு, சிறிது த
யின்றார்கள்!

"குமார், இந்தக் குடி
லிருந்துதான் அழுகுரல் வருகி
என்று கோபால் கூற, "ஆம
என்று குமார் கூறியதும், அ
சையை நோக்கி அனைவரும் ெ
சம் தயக்கத்துடனே நடந்தார

குடிசையின் அருகே வந்த
ஆண்டி கூறியது கவனத்
வரவே குமாரும், கோபாலும்
ரிசையும் சுற்றி ஒரு முறை ப
தார்கள். மெதுவாக குடிசை
அருகில் சென்றார்கள். அவர்க
காலடிச் சப்தத்தைக் கேட்ட
அழுது கொண்டிருந்தவள்
அழுகையை நிறுத்தி விட்
திடீரென்று அழுகுரல் நி
விடவே, அவர்களுக்குப் ப
சந்தேகம் ஏற்பட்டது. பிறகு
மேல் அடி வைத்து குடிசை
அடைந்து, உள்ளே எட்டிப்
தார்கள். அங்கே அவர்கள் க
காட்சி, அவர்களைத் தூக்கி
போட்டது! வேணி "அய்
என்று அலறியே விட்டாள்!
ரும் கோபாலும் கண் க
துடைத்துக் கொண்டு, குடி

[11-ம் பக்கம் பார்க்க]

சென்னை மாகாண

## இந்தி எதிர்ப்பாளர் மாநாடு

★

சென்னை செயின்ட் மேரி மண்டபத்தில்

**17—7—48 சனி பகல் 2-மணி முதல்**

★

**தலைவர் :** ஆசிரியர் மறைமலை அடிகள்

**திறப்பாளர் :** நாவலர் பாரதியார்

**வரவேற்புத் தலைவர் :** தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

**பெரியார் வருகிறார்.**

மற்றும், தோழர்கள் சௌந்தர பாண்டிய
வி. வி. ராமசாமி, கி. ஆ. பெ. விசுவநாதம், சி.எ
அண்ணாதுரை ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர்.

Edited, Priinted and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliy
atFree Printers 147, Coral Merchant St., Madras. JointEditor, M. Ilancheliyan B A. (